**IN THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE COURT, HOSUR.**

**MCOP : 368/2025** **Date : 12-03-2026**

**PW.1 : வெங்கடேஷ்**

சாட்சியாக விசாரிக்கப் படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. பொ. சண்முகராஜ், எம். எல்., நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஷ் | தந்தை பெயர் | சகாதேவன் |
| வயது | 26 | கிராமம் | பந்தாரப்பள்ளி |
| வட்டம் | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை:-**

நான் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் என்னுடையது தான். அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டு கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| Ex P1 | | முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல் |
| Ex P2 | | காயச்சான்றிதழ் – சான்றிட்ட நகல் |
| Ex P3 | | விடுவிப்பு சான்றிதழ் – அசல் |
| Ex P4 | | காப்பீட்டு சான்றிதழ் – ஜெராக்ஸ் நகல் |
| Ex P5 | | ஓட்டுநர் உரிமம் – ஜெராக்ஸ் நகல் |
| Ex P6 | | ஆதார் அட்டை – சான்றிட்ட நகல் |
| Ex P7 | | மருத்துவ பில்கள் ( ரூ. 87,022/- ) – அசல் |

மருத்துவ ரசீதுகள் மட்டும் எதிர் மனுதாரரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

நான் இரு சக்கர வாகனத்தில் போய் கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த வாகனம் வெங்கடேசப்பா உடையது. எனக்கு இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் சம்பவத்தின் போது இருந்ததா என்றால் இல்லை. அதே போல் வாகன காப்பீடும் நான் ஓட்டு சென்ற வாகனத்திற்கு இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்க படும் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு உரியது என்றால் சரிதான். அதில் எனக்கு வாகன ஓட்டுநர் உரிமமும், காப்பீடும் இல்லை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்க படும் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை 1 ஆம் எதிர் மனுதாரரின் பொலிரோ பிக்கப் வாகனத்திற்கு உரியது என்றால் சரிதான். அதில் அவருக்கு வாகன ஓட்டுநர் உரிமமும், காப்பீடும் உள்ளது என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிக்கைகளும் எ.ம.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இராயக்கோட்டை நோக்கி சென்ற போது எதிரே வந்த பிக்கப் வாகனம் இராயக்கோட்டையிலிருந்து வந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடம் பாலம் அருகே பள்ளமாக பகுதி என்றால் இல்லை. சுடுகாடு அருகே பாலம் உள்ளது என்றால் இல்லை. சம்பவத்தின் போது சாலை பணி நடந்து கொண்டிருந்தது என்றால் இல்லை. எனக்கு இரு சக்கர வாகனம் ஓட்ட தெரியாமால் ஓட்டி சென்று விபத்திற்கு காரணமாக இருந்துள்ளேன் என்றும், எதிரே வந்த வாகன ஓட்டுநரின் கவன குறைவு இல்லை என்றால் சரியல்ல.

வாகனம் ஓட்ட தெரிந்திருந்தால் ஓட்டுநர் உரிமம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு வலது தோள் பட்டை எலும்பு முறிவு ஏற்பட்டது. வேறு எந்த முறிவு காயம் இல்லை. காவேரி மருத்துவமனையில் 10.01.2021 முதல் 13.01.2021 வரை சிகிச்சை எடுத்து கொண்டேன். பில் தொகைகளை எனது உறவினர்கள் தான் கொடுத்தார்கள் வேறு யாரும் தரவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளில் இறுதி பில்லில் கூறப்பட்டுள்ள ரூ. 81,000/- மட்டுமே எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. மருத்துவ ரசீதுகளில் 3 முதல் 5, 8 முதல் 12 நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது கொடுக்கப்பட்ட பில் என்பதால் அது ஏற்கனவே மொத்த பில் தொகையில் சேர்க்கப்பட்டு விட்டதால் கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். என் மீது எதிரே வந்த வாகன ஓட்டுநர் புகார் கொடுத்து விடுவார் என்று அதற்கு பயந்து நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவன குறைவால் ஏற்பட்டதால் 1 மற்றும் 2 எதிர் மனுதாரர்கள் பொறுப்பில்ல என்றால் சரியல்ல. விபத்தினால் நிரந்திர ஊனம், செயல் திறன் பாதிப்பு, வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கோரியுள்ள மனு தொகை வட்டி அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை:-**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P. Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur.